தகவல் சட்டம் 2005
அறியும் உரிமைச்

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

ஆணை நாள் 14.07.2026

முன்னிலை

**திரு.அ.விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3865/B/2025**

திரு.ஞா.பிரகாசம் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / — பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கல்குளம் வட்டம்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629175.

**கோரிய தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 15.11.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில், கட்டிமாங்கோடு ஊராட்சியில் பொது நிதியில் குருந்தன்கோடு அ கிராமம் புல எண். 278/14-இல் வடிகால் அமைத்து கான்கிரீட் அமைத்து சீர் செய்ய அனுமதி தொடர்பாக உதவி பொறியாளர், நீர்வளத்துறை, நீர்பாசன (சிறப்பு) பிரிவு, தக்கலை அவர்களுக்கும், வட்டாட்சியர், கல்குளம் அவர்களுக்குமிடையேயான கடித போக்குவரத்துகள், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 4 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து உரிய தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 24.02.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (14.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேல்முறையீட்டாளர் — திரு.ஞா.பிரகாசம் இன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. (தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது).

பொதுத் தகவல் அலுவலர்

பொதுத் தகவல் அலுவலர்
திருமதி.ஆர்.மகிபா ராஜ செலி,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
கல்குளம் வட்டம், கன்னியாகுமரி அவர்கள்
ஆஜரானார்.

**ஆணை**

1. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 18.12.2024, 10.01.2025 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்ட தெரிவித்து, அதற்குண்டான ஆவண நகல்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், 06.07.2026 தேதியன்று இவ்வாணையத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிய கடிதம் வாயிலாக, தனது உடல் நலமின்மை காரணமாக தான் நேரடி விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்று தெரிவித்து, ஆகவே தன்னிடம் காணொளி காட்சி வாயிலாக அல்லது தொலைபேசி வாயிலாக விசாரணை மேற்கொள்ளுமாறும், தான் கேட்ட தகவல்களை தனக்குப் பெற்றுத்தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். இதனை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

3. இன்றைய விசாரணையின் முடிவில், இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மேல்முறையீட்டாளர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரும் உதவி பொறியாளர், நீ.வ.து.நீர்பாசன (சிறப்பு) பிரிவு, தக்கலை அவர்களது கடிதங்கள் மீது கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை விவரங்கள் குறித்த தகவல்கள் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்படவேண்டியுள்ளதை இவ்வாணையம் அறியமுடிகிறது.***
2. *மேலும், மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகி அவரது வாதத்தை ஆணையத்தின் முன்பு தெரிவிக்காத நிலையிலும், அவர் இவ்வழக்கின் விசாரணையை காணொலி காட்சி மூலம் வைக்க கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும், **இவ்வழக்கின் விசாரணை 07.08.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.***
3. *மேற்படி இவ்வழக்கின் மறுவிசாரணைக்கு மேல்முறையீட்டாளர் அவர்கள், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கல்குளம் அவர்கள், பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளரின் தொழில்நுட்ப நேர்முக உதவியாளர், நீ.வ.து., கோதையாறு வடிநில கோட்டம், நாகர்கோவில் அவர்கள் ஆகிய மூவரும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள தேசிய தகவல் மையத்தின்(NIC) காணொலி காட்சி அரங்கில் 07.08.2026 அன்று முற்பகல் 10.30 மணிக்கு நேரடியாக ஆஜராகுமாறு உத்தரவிடப்படுகிறது.*
4. *பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கல்குளம் வட்டம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள், பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளரின் தொழில்நுட்ப நேர்முக உதவியாளர், நீ.வ.து., கோதையாறு வடிநில கோட்டம், நாகர்கோவில் அவர்கள் ஆகிய இருவரும் இவ்வழக்கு குறித்த தங்களது அறிக்கைகளை உரிய ஆவணங்களுடன் இவ்வாணையத்திற்கு*

***sicbsec1@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் 06.08.2026-க்குள் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***

**ஓம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3865/B/2025</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கல்குளம் வட்டம்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629175.

பொதுத் தகவல் அலுவலர் /
செயற்பொறியாளரின் தொழில்நுட்ப நேர்முக உதவியாளர்,
செயற்பொறியாளர் அலுவலகம்,
நீர்வள ஆதாரத்துறை,
தோதையாறு வடிநில கோட்டம்,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்:</u>**

திரு.ஞா.பிரகாசம்,
8/78B, தெற்குத்தெரு,
காரங்காடு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம் - 629809.

Copy to : File
AK/PC